மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மதுராந்தகம்.

அ.வ.எண். 101/2020

இந்த நீதிமன்றத்து எழுத்தர் திரு.J.மோகன் என்பவரால் முறையாக பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10 வது சட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு 2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ம் நாள் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். சுப்பிரமணி | வயது |
| த.பெ(அ) க.பெ முனியபிள்ளை | மதம் |
| கிராமம் | வட்டம் |

<u>பி.சா.1 முதல் விசாரணை</u>

01.09.2025

இந்த வழக்கில் நான் பிரதிவாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணையை சத்திய பிராமாண வாக்குமூலமாக இன்று தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. பிரதிவாதி பெயரில் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகள் (2 எண்ணிக்கை) அசல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பிரதிவாதி பெயரில் தாக்கல் செய்துள்ள குடிநீர் வரி ரசீதுகள் (2 எண்ணிக்கை) அசல் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பிரதிவாதியின் அப்பா பெயரில் உள்ள மின் கட்டண அட்டை அசல் பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. மாணிக்கபிள்ளை பெயரில் உள்ள மின் கட்டண அட்டை அசல் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 26.07.2018 தேதியில் பிரதிவாதி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 29.10.2019 தேதியில் மதுராந்தகம் காவல் நிலையத்தால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எண்.429/2019 உண்மை நகல் பி.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(பி.சா.ஆ.1 மற்றும் 2 வாதி தரப்பில் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யபடுகிறது, பி.சா.ஆ.6 தாவாசொத்திற்குரிய பிரச்சனை சம்பந்தமாக ஏற்பட்ட முதல் தகவல் அறிக்கை கிடையாது என்று வாதி தரப்பில் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)